புலமைக்கதிர் 5

புலமைப் பரிசில் பரீட்சைக்கான வழிகாட்டி

-- தாய்மொழி --

நேரம்:- 01 மணி

01. சரியான விடையைத் தெரிவு செய்து கோடிடுக.

1. மாதவி அகம் மகிழ்ந்தாள் என்பதில் அகம் என்பதன் கருத்து

1. மகம் 2. புறம் 3. உள்ளம்

2. பூஞ்சோலைக் கிராமத்தில் சிறந்த வீரன் ஒருவன் இருந்தான். இங்கு வந்துள்ள வீரன் என்பதன் பெண்பாற் சொல்

1. வீராங்கனை 2. வீரி 3. வித்தகி

3. காந்தியடிகள் கடைப்பிடித்த கொள்கை

1. பொறாமை 2. அஹிம்சை 3. போர் செய்தல்

4. நாம் செல்லும் இடங்களில் நாகரிகமாக நடந்து கொள்ள வேண்டும். இங்குள்ள நாகரீகம் என்பதன் எதிர்ப்பதம்

1. அநாகரியம் 2. அநாகரிகம் 3. அனாகரிகம்

5. பின்வருனவற்றில் மடக்கேறும் அரவம் இடம்பெற்றுள்ள சொல்

1. நுட்பம் 2. சுதந்திரம் 3. நூலகம்

6. கோழி - கொக்கரிக்கும் என்பது போல் புறா : .....?

1. அகவும் 2. கீச்சிடும் 3. குறுகுறுக்கும்

7. கடல் : நீர் எனின் வானம் : .....?

1. நட்சத்திரம் 2. முகில் 3. விமானம்

8 கதிரை : தளபாடம் எனின் பேனா : .....

1. பென்சில் 3. எழுதுகருவி 3. புத்தகம்

9. பதி திசை சைகை ..... என்னும் தொடர் ஒழுங்கில் அடுத்து வரக்கூடிய மிகப்பொருத்தமான சொல் எது?

1. கைம்மாறு 2. கைதி 3. கைகலப்பு

10. வெறுமை + இலை என்பதை சேர்த்தெழுதினால் வருவது

1. வெறுமையிலை 2. வெற்றிலை 3. வெற்றுஇலை

திரு. க. சந்திரகுமார். (0778888670) --- ஆசிரிய ஆலோசகர், வவுனியா வடக்கு. ---

11. அவர்கள் இருவரும் கீரியும் பாம்பும் போலவே இருப்பார்கள். இதில் வந்துள்ள "கீரியும் பாம்பும் போல" என்பதன் கருத்து.

1. நட்புடன் இருத்தல் 2. பகையாக இருத்தல் 3. பரிவுடன் இருத்தல்

* **பின்வரும் பாடலை வாசித்து விடை தருக.**

நல்லார் ஒருவருக்கு செய்த உபகாரம்
கல்மேல் எழுத்துப்போல் காணுமே - அல்லாத
ஈரமில்லா நெஞ்சத்தார் கீந்த உபகாரம்
நீர் மேல் எழுத்துக்கு நேர்

12. "கல் மேல் எழுத்துப்போல்" என்பது

1. இணைமொழி 2. அடுக்குத்தொடர் 3. உவமைத்தொடர்

13. "நீர் மேல் எழுத்துக்கு நேர்" என்பதால் கருதப்படுவது

1. நிலையான தன்மை 2. இரக்கமில்லாத தன்மை 3. நிலையற்ற தன்மை

14. அனைவரும் உறங்கிய பின்னர் கண்ணன் விழித்திருந்து பாடம் படிப்பான் இதில் வரும் எழுவாய்

1. அனைவரும் 2. கண்ணன் 3. பின்னர்

15. அனுபவமற்ற கல்வியால் பயன்கிடையாது. எனும் கருத்தைத் தரும் பழமொழி

1. ஐந்தில் வளையாதது ஐம்பதில் வளையுமா?
   இளமையிற் கல்வி சிலையில் எழுத்து
3. ஏட்டுச்சுரைக்காய் கறிக்குதவாது

16. பின்வருவனவற்றில் மிகச்சரியாக எழுதப்பட்ட வாக்கியம் அல்லாதது

1. வேகமாக வீசிய காற்றில் மரங்கள் அசைந்தாடின.
2. கர்ணன் செய்நன்றி மறக்காதவன்
3. அவனது கையிலிருந்து குருதி வழிந்தோடின.

17. "விழாவைவென்றாலே" என்பதைப் பிரித்தெழுதினால் வருவது

1. விழா + வென்றாலே 2. விழா + என்றாலே 3. விழா + ன்றாலே

18. சிறுவன், சிறுமி ஆகிய இரு சொற்களுக்கும் பொருத்தமான பலர்பாற் சொல்

1. மாணவர்கள் 2. சிறுவர்கள் 3. சிறுமிகள்

19. கையும் மெய்யுமாக அகப்பட்ட திருடன்..... என விழித்தான். இடைவெளியில் வரவேண்டிய சொல்

1. கிடுகிடு 2. படபட 3. திருதிரு

20. மக்கள் விவசாயத்திற்காக அதிகளவு நீரைப் ..... இடைவெளியில் வரவேண்டிய சொல்

1. பயன்படுகின்றன 2. பயன்படுத்துகின்றன 3. பயன்படுத்துகின்றனர்

திரு. க. சந்திரகுமார். (0778888670) --- ஆசிரிய ஆலோசகர், வவுனியா வடக்கு. ---

02. பின்வரும் சொற்களை ஒழுங்குபடுத்தி பொருத்தமான வாக்கியமாக எழுதுக.

1. எமது/ சொத்தக்களைப்/ கடமை/ பேணுதல்/ பொதுச்/ ஆகும்.

.....

2. கற்பது/ தரும்/ நாம்/ அதிகாலையில்/ பலனைத்/ சிறந்த

.....

3. குடும்பத்தின்/ கிரகமாக/ வியாழன்/ உள்ளது/ சூரியக்/ பெரிய/ கிரகம்

.....

4. ஆகும்/ சிறுவர்களின்/ கற்பது/ கல்வி/ உரிமை

.....

5. மங்காது/ குன்றிமணி/ குப்பையிற்/ கிடந்தாலும்

.....

03. பின்வரும் வாக்கியங்களில் உள்ள இடைவெளிகளுக்குப் பொருத்தமான சொல்லைத் தெரிந்து அதன் கீழ் கோடிடுக.

1. இன்று கிராமியக் கலைஞர்களைக் காண்பது ..... காரியம் ஆகும். (அரிய, அறிய)
2. அவன் எய்த ..... பட்டு மான் கீழே விழுந்தது. (பானம், பாணம்)
3. ..... பார்த்தவன் காவலர்களால் பிடிக்கப்பட்டான்.(உலவு, உளவு)

04. பின்வரும் தொடர்களின் கருத்தைத் தரும் தனிச்சொற்களை எழுதுக.

1. ஐம்பதாவது ஆண்டில் கொண்டாடப்படும் விழா .....
2. சுதந்திரமற்று வாழ்பவன் .....

05. பின்வரும் சொற்களில் சரியாக எழுதப்பட்ட சொல்லின் கீழ் கோடிடுக.

1. சுயநலவாதி, சுயனலவாதி, சுயநளவாதி, சுயநழவாதி
2. கடக்கரை, கடற்க்கரை, கடற்கரை, கடட்கரை
3. முயச்சி, முயற்சி, முயற்ச்சி, முயர்ச்சி

06) நாளை மறுதினம் புதன்கிழமை மு.ப 10.00 மணிக்கு சேக்கிழார் மண்டபத்தில் பரிசளிப்பு விழா நடைபெறும்.

கட்டத்திற்குள் உள்ள விடயம் அறிவித்தல் எனில் மறுதினம் எனும் சொல்லின் கீழ் கோடிடுக. அவ்வாறில்லை. எனில் பரிசளிப்பு எனும் சொல்லைச் சுற்றி வட்டமிடுக.

www.ikedu.lk

07. பின்வரும் பழமொழிகளுக்குப் பொருத்தமான கருத்தை எழுதுக.

1. அகத்தின் அழகு முகத்தில் தெரியும்

.....

2. இக்கரை மாட்டுக்கு அக்கரை பச்சை

.....

08. பின்வரும் கருத்துகளுக்குப் பொருத்தமான மரபுத்தொடர்களை எழுதுக.

1. மேலெழுந்தவாரியாகப் படித்தல்

.....

2. தந்திரமாகப் பேசுதல்

.....

09. பின்வரும் வாக்கியங்களுக்கு பொருத்தமான நிறுத்தற்குறிகளை இடுக.

1. உன்னை காப்பாற்றியதற்கு நீ எனக்குக் காட்டும் நன்றிக் கடன் இதுதானா என்று மான் கேட்டது
2. அப்பா நான் இன்று பன்னிரண்டு மணிக்கு படிக்கப்போகிறேன்

10. பாரம்பரிய விளையாட்டுக்கள் எமது முன்னோர்களின் உடலாரோக்கியத்தைப் பேணவும், ஒற்றுமை சகிப்புத் தன்மை ஆகியவற்றை நிலைநிறுத்தவும் கற்றுக் கொடுத்தது. ஆகவே 'பண்டைய விளையாட்டின் முக்கியத்துவம்' எனும் தலைப்பில் ஐந்து சொற்களுக்குக் குறையாத எழுவாய், பயனிலை பொருத்தபாடுடையதாக மூன்று வாக்கியங்கள் எழுதுக.

1. .....

.....

2. .....

.....

3. .....

.....

www.ikeou.lk